## August 21, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ரஷியா-உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவரவே இந்தியா மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வரி விதித்தார் என்று அந்நாட்டு அதிபர் இல்லமான வெள்ளை மாளிகை விளக்கம் அளித்துள்ளது.
    i. அமெரிக்காவின் செயல்பாடுகள் இந்தியாவுக்கு சவாலாக உள்ளது. எனினும், இந்தியாவுடனான உறவில் ரஷியா மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளது.
    ii. ரஷியா-இந்தியா-சீனா (ஆர்ஐசி) இடையே விரைவில் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற வாய்ப்புள்ளது. அமெரிக்காவின் நடவடிக்கையை எதிர்கொள்வதற்கென சிறப்பு திட்டத்தை ரஷியா வைத்துள்ளது. அமெரிக்காவுக்கு பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியவில்லை என்றால் அதை ரஷியாவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்யலாம். ரஷிய சந்தை இந்தியாவுக்காக எப்போதும் திறந்திருக்கும் என்று ரஷிய தூதரக துணைத் தலைவர் ரோமன் பாபுஸ்கின் தெரிவித்தார்
2. ஜிஎஸ்டி விகிதத்தை மறுசீரமைக்கத் தேவையான ஒத்துழைப்பை தமிழ்நாடு அரசு வழங்கும் என்று புதுதில்லி கூட்டத்தில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.
    i. ஜிஎஸ்டியில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான பரிந்துரைகளை வழங்க மாநில நிதி யமைச்சர்கள், சில மாநிலங்களின் முதல்வர்கள் மற்றும் சுகாதார அமைச்சர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட மூன்று குழுக்களின் (ஜிஓஎம்) ஆலோசனைக் கூட்டம் தொடங்கியது.
    ii. இதில், தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்றுப் பேசினார். ஜிஎஸ்டி விகிதங்களை சீரமைக்கும் முனைவுகள் வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில், மாநிலங்களின் நிதி ஆதாரங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். தமிழ்நாடு உள்பட பல மாநிலங்கள் பெரும் உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் நிலையில், இதற்கான செலவினங்களைக் குறைக்கும் வகையில் வரி சீரமைப்பு வழிவகுக்கக்கூடாது.
    iii. ஜிஎஸ்டி விகிதங்களை சீரமைக்கும் தருணத்தில் இழப்பீட்டு மேல்வரியும் முடிவுக்கு வரவுள்ளது. ஒரே நேரத்தில், ஜிஎஸ்டி விகிதக் குறைப்பு மற்றும் இழப்பீட்டு மேல்வரியை நீக்குவது ஆகியன மாநிலத்தின் வருவாயை கணிசமாகப் பாதிக்கும். எனவே, ஜிஎஸ்டி விகித மறுசீரமைப்பு காரணமாக மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை ஈடுசெய்ய இழப்பீட்டு மேல்வரியை நீட்டிக்க வேண்டும்.
    iv. மாநிலங்களின் நிகர கடன் உச்சவரம்பு மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதமாக எவ்வித நிபந்தனையும் இல்லாமல் உயர்த்தப்பட வேண்டும் என்றார் அமைச்சர்.

3. தீவிர குற்றப்புகாரில் கைது செய்யப்பட்டு 30 நாள்கள் காவலில் வைக்கப்படும் பிரதமர், மாநில முதல்வர்கள் மற்றும் அமைச்சர்களைப் பதவியிலிருந்து நீக்கம்

செய்வதற்கான மூன்று சட்ட மசோதாக்கள் மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டன.

i. எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு இடையே 'யூனியன் பிரதே சங்கள் திருத்த மசோதா 2025, அரச மைப்புச் சட்டம் 130-ஆவது திருத்த மசோதா 2025, ஜம்மு-காஷ்மீர் மறுசீரமைப்பு திருத்த மசோதா 2025 என்ற அந்த 3 மசோதாக்களை மத்திய உள் துறை அமைச்சர் அமித் ஷா அறிமுகம் செய்தார்.

ii. ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கக்கூடிய வகையிலான தீவிர குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு 30 நாள்கள் காவலில் வைக்கப்படும் பிரதமர், மத்திய அமைச்சர்கள் அல்லது மாநில முதல்வர்கள், 31-ஆம் நாளில் அந்தப் பதவியை இழந்துவிடுவர் என்பதை இந்த மசோதாக்கள் பரிந்துரைக்கின்றன.

iii. யூனியன் பிரதேச அரசு சட்டம் 1963-இல் இதுபோன்று தீவிர குற்றப் புகாரில் சிக்கும் முதல்வர்களை அல்லது அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்ய எந்தவொரு பிரிவும் இல்லை. எனவே, இதுபோன்ற தீவிர குற்றச்சாட்டில் சிக்கும் முதல்வர்கள் அல்லது அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்ய யூனியன் பிரதேச சட்டம் 1963-இன் பிரிவு 45-இல் சட்டத் திருத்தம் தேவைப்படுகிறது என்றும் மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. தூத்துக்குடியில் உள்ள வ.உ. சிதம்பரனார் துறைமுகம், காற்றாலை இறக்கைகளைக் கையாளுவதில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்று சாதனைப் படைத்துள்ளது. துறைமுகம் வ.உ.சிதம்பரனார் கடந்த ஜூலை மாதத்தில் 343 காற்றாலை இறக்கைகளைக் கையாண்டு முகம், 2024 ஜூலை மாதத்தில் கையாண்ட அளவான 180 காற்றாலை இறக்கைகளை விட 90.56 சதவீதம் அதிக வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

5. கஜகஸ்தானில் நடைபெறும் ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில், இந்தியாவுக்கு 2 தங்கம், 2 வெண்கலம் என 4 பதக்கங்கள் கிடைத்தன.

i. இதில், ஆடவர் தனிநபர் ஸ்கீட் இறு சுற்றில் இந்தியாவின் அனந்த்ஜீத் சிங் நருகா 57 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து தங்கம் வென்றார்.

6. இந்திய விமானப்படைக்கு மேலும் 97 'தேஜஸ்' போர் விமானங்களை ரூ.67,000 கோடியில் கொள்முதல் செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

i. தற்போது இந்திய விமானப்படையில் போர் விமானப் படைப் பிரிவுகளின் எண்ணிக்கை 31-ஆக உள்ளது. இது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையான 42-ஐ விட குறைவாகும். இந்தப் புதிய கொள்முதல் மூலம் இந்திய விமானப்படையில் போர் விமானங்களின் பலம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7. 5,000 கி.மீ. தொலைவிலான இலக்குகளை குறிவைத்து தாக்கும் அக்னி-5 பலிஸ்டிக் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடைபெற்றதாக பாதுகாப்பு

அமைச்சகம் தெரிவித்தது. ஒடிஸாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை மையத்தில் இந்தச் சோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

i. இந்த ஏவுகணை சீனாவின் வடக்குப் பகுதி உள்பட ஒட்டுமொத்த ஆசியா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகள் வரை சென்று தாக்கு தல் நடத்தும் திறனுடையது.
ii. அக்னி 1 முதல் 4 வரையிலான ஏவுகணைகள் ஏற்கெனவே பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில், கடந்த ஆண்டு மார்ச் மாதமும் அக்னி-5 ஏவுகணை சோதனை மேற்கொள்ளப்பட்டது.

8. பணம் செலுத்தி விளையாடப்படும் இணையவழி சூதாட்ட விளையாட்டுகளுக்குத் தடை விதிக்கும் 'இணையவழி விளையாட்டு மேம்பாட்டு மற்றும் ஒழுங்குமுறை சட்டமசோதா 2025' மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

முக்கிய அம்சங்கள் :-

i. இணையவழி விளையாட்டை நடத்தினால் 3 ஆண்டுகள்வரை சிறைத்தண்டனை அல்லது ரூ.1 கோடி வரை அபராதம்.
ii. விளம்பரம் செய்பவர்களுக்கு 2 ஆண்டுகள் வரை சிறை அல்லது ரூ.50 லட்சம் வரை அபராதம்.
iii. மீண்டும் அதேகுற்றத்தைச்செய் பவர்களுக்கு ரூ.2 கோடி வரை அபராதம் மற்றும் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை.

9. அஸ்ஸாம் மாநிலம் குவாஹாட்டியில், நாட்டின் 22-ஆவது இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் (ஐஐஎம்) ரூ.555 கோடியில் அமைக்கப்பட உள்ளது.

i. இதற்கான 'ஐஐஎம் சட்டத்தி ருத்த மசோதா 2025', மக்களவையில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட நிலையில், மாநிலங்களவையிலும் குரல் வாக் கெடுப்பு மூலம் நிறைவேறியது. அடுத்த ஆண்டு தொடக்கத்தில் அஸ்ஸாமில் பேரவைத் தேர்தல் வரவிருப்பதால், இந்த அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

10. காப்பீடு பிரீமியம் தொகைக்கு சரக்கு-சேவை வரியில் (ஜிஎஸ்டி) இருந்து விலக்கு அளிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதே நேரத்தில் இதனால் தங்கள் வருவாய் பாதிக்கும் என்று மாநில அரசுகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

i. தற்போது ஆயுள் காப்பீடு, மருத்துவக் காப்பீடு பிரீமியம் தொகை மீது 18 சதவீதம் ஜிஎஸ்டி விதிக்கப்படுகிறது. இது மத்திய, மாநில அரசுகளுக்கான ஜிஎஸ்டி வருவாய் குறிப்பிடத்தக்க அளவு பங்கு வகிக்கிறது.